எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றும்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து ருமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்

கனவு 10 கற்பனை 2] திருச்சி 15—2—67 [தனிப்பிரதி 25 காசு

வெற்றிப் பாதையில் தூய உள்ளம்

[ரெட்டியார்]

ஓமென்னும் ஒலி அமர்ந்து வாமனுமாகி
உள்ளடங்கி மெய்யுணர்த்தி ஓங்கும் கணநாதன்
தாமடங்கத் தமைத்தாமே தாமாளுவோர்கள்
தமதுள்ளம் கொலுவமர்ந்து தத்வமசி போதம்
சாமிநீ! சாமிநீ! என்றுணர்ந்து வாழ்த்திச்
சரண் அடைவர் துயர்தீர்க்கும் விநாயகனை என்றும்
நேமிநீ! நேமிநீ! என்றுபதம் போற்றி
நெஞ்சத்தில் வைத்திடுவோம் பாதமலர் காப்பு

தாயானுன் திருக்கழல்கள் தாங்கும் நெஞ்சம்
சரவணப் பொய்கையான் சயனிக்கும் மஞ்சம்
மாயாவு தாரன்வட வேங்கடமே மேவு
மாலிருக்கும் குன்றமென் வளமான நெஞ்சம்
சாயாத சத்தியமதை சாதித்த காந்தி
தன்வழியில் தவமென்ன தவழுகின்ற உள்ளம்
ஓயாது பாரதியெம் குருதேவன் பாதம்
ஓதுரெட்டி யார்குரலில் ஓமொலிக்கும் ஒன்றே

விண்ணரசி வெற்றியெனும் கன்னிதனைக் கண்டு
வேட்கும் மணவாளர்களாய் கன்னித் தமிழ்க்கொண்டு
மண்ணிதிலே ஊக்கமொடு உறுதியுடன் உழைப்பு
மகத்தான அன்படக்கம் மாஇலட்சியத்தோடு
கண்ணெனும் பரோபகார சிந்தையெலாம் கூடி
கவியரங்கைச் சுயம்வரமாய்ச் செய்திடவே வந்த
எண்ண வேட்பாளர்களே! இங்கு மணமுடிக்க
எழுந்த கவிவாணர்களே! எல்லோரும் வாழி.

உள்ளமெனும் கடலதனில் ஒரு கோடி இன்பம்
உணர்ந்து அறிந்து பெற்றிடவே உட்பொதித்து
வைத்தாள்
பள்ளமதில் தான்பொதித்த பரமசுகம் தன்னைப்
பகுத்தறிந்து பெற்றிடவே ஐம்புலனை வைத்தாள்
கள்ளமோடு புலனைந்தும் கட்டவிழ்த்து மேய்ந்தால்.
கண்டதனைக் கட்டிவைக்கத் தொல் அறிவை
வைத்தாள்
வெள்ளை மனத் தாலுயர்ந்த மேலவரை இந்த
விளக்கமதை விண்டுரைக்க வையகத்தே வைத்தாள்

வெள்ளைமனம் என்னும் வெண் தாமரையின்மீது
வீணையுடன் தமிழ்வாணி கொலுவமர்ந்துமீட்டி
அள்ளிவரும் சொற்களிலே அறிவென்னும் தேனும்
ஆறுகப்பெருகிவர அருளாட்சி செய்வாள்
துள்ளிவரும் சொற்களிலே தேவசுகம் கண்டு
சோம்பரின்றி மானிடமே தூய உள்ளம் கொள்ளத்
தெள்ளு தமிழ்க் கவிதைகளே தென்மறையாமென்ன
தீங் கவிதை பாடுகின்றுள் செந்தமிழின் வாணி.

மனமது தூய்மையுற்றால் மந்திரமாகும் வாய்ச்சொல்
வார்த்தையில் வினயம்தோன்ற வந்திடும்பரிவு துள்ளி
சினமெனும் தீமை ஓட்டிச் சிந்தனைத்தெளிவு காண்பீர்
சித்தமே உலகமாகத் திகழ்ந்திடச் சுற்றம் சேரும்,
வனமென உள்ளம் மாறி வருபவர்க்கிடம் அளிக்கும்
வரிப்புலி பசுவும் சேர்ந்துவாழ்ந்திடும் ஒருங்கே அங்கு
புனலெனும் அன்பில்மூழ்கிப் பொய்எலாம் கரைந்தே
ஓடப்
புவியினில் அமரர் போலப் போற்றிட வாழ்வம்வாரீர்.

உருவமே இல்லா உள்ளம் ஊண்மிகு மனிதக் கூட்டில்
உள் நின்றே ஆட்டி வைத்திவ்வுலகத்தைக் காண
வைக்கும்
திருவருள் இறங்கி வந்து ஜெகத்தினைப் படைத்துக்
காத்து
தேடுவோர் தமக்கும் எட்டாத் தேவனாய் இருக்கும்
உண்மை

4-ஆம் பக்கம் பார்க்க

"கம்ப இராமாயணம்" - இன்ப காவியம்

-["கோவிந்தன்"]-

★

குலம், கோத்திரம் இவைகளைக் கல்யாணத்திற்கு முன்பாக பார்ப்பது பழக்கம், என்று முன்பு கூறினோம். முதலில் மூன்றும் மனிதர்கள் மூலமே இந்தக் குலம், கோத்திரம் இவைகளை அறிவது பழக்கம். இதை நன்குணர்ந்த விசுவாமித்திர முனிவர் சதானந்தரிடம் சகலமும் கூறினார். இப்போது மூவரும் சனகனுடைய யாகசாலைக்கு வந்தனர். யாகசாலையிலே முக லட்சணங்களுடன் விளங்கிய குமாரர்களைக் கண்ட சனகன், இவர்கள் யார்? என்று நேரிடையாகவே கௌசிக முனிவரிடம் கேட்டார். நேரிடையாகவே விசுவாமித்திரரும் பதில் கூறினார்.

இருந்த குலக் குமரர்தமை இருகண்ணும்
முகந்து அழகுபருக நோக்கி
அருந்தவனை அடிவணங்கி, 'யார்' இவர்கள்?
உரைத்திடுமின், அடிகள்!' என்ன,
விருந்தினர்கள் நின்னுடைய வேள்வி
காணிய வந்தார், வில்லும் காண்பார்
பெருந்தகைமைத் தயரதன் தன்புதல்வர் என
அவர் தகைமை பேசலுற்றான்

"விருந்தினர்களாக இக்குமாரர்கள் இங்கு வந்துள்ளார்கள். வேள்வியைக் காணவே இங்கு வந்தார்கள். வில்லும் காண்பார்கள்". என்றார் முனிவர். ஒளிவு மறைவு இல்லாமல் தான் வந்த நோக்கத்தை முனிவர் சனகனிடம் கூறிவிட்டார். அரச குமாரர்களை, சனகன் பார்த்த விதத்தையும், அவர்கள் யார்? என்று அவன் ஆவலோடு கேட்ட கேள்வியையும் மனதிலே கொண்டு, சனகன், என்ன, எண்ணத்தில் கேட்கிறார், என்பதைப் புரிந்து கொண்டார் முனிவர். சூசகமாக வில்லும் காண்பார்கள் என்றார். வில்லைத் தன்னுடைய பெண்ணின் கல்யாணத்திற்குப் பணயமாக வைத்துள்ளார் சனகன்.

வில்லை முறித்தவனுக்குத் தான் பெண்ணைக் கொடுக்க முடியும் என்பது சனகன் முடிவு. இதை மனதில் கொண்டுதான வில்லும் காண்பார்கள் என்றார் முனிவர். இவர்கள் தசரதச் சக்கரவர்த்தியினுடைய புதல்வர்கள் என்றார் முனிவர். தசரதன் பிள்ளைகள் என்று மட்டும் சொல்லி நிறுத்தி விடவில்லை. இந்த இரண்டு அரச குமாரர்களும் எந்த வம்சத்தில் வந்தவர்கள், அந்த வம்சத்தினுடைய கீர்த்தி, அதில் தலைசிறந்து விளங்கிய மன்னர்கள், அவர்கள் ஆற்றிய அருஞ்செயல்கள் ஆகியவைகளை ஒன்றன் பின் ஒன்றாக முனிவர் சனக மகராஜனுக்குக் கூறினார்.

"ஆதித்தன் குலமுதல்வன் மனுவினை அறியாதவர் யார் இருக்க முடியும்? அணி அரங்கம் தந்தானை அறியாதார் அறியாதாரே! அம்புயத்தோள் அயோத்தி மன்னற் களித்த கோயில் என்று தேசிகன் கூடப் பிறகு அரங்கத்தின் பெருமையைப் பாடுகின்றபோது பாடுகிறார். புலிப்போத்தும், புல்வாயும் ஒரு துறையில் நீர் உண்ண, உலகு ஆண்ட ஒருவனும், மென்புறவின் மன் உயிர்க்கு தன் உயிரை மாறாக வழங்கிய சிபியும், ஏடுஅவிழ் கொன்றைப் பூநின்ற மவுலியையும், புக்கு அளைந்த புனற்கங்கையும், வான்நின்று கொணர்ந்தவனும், ரகுவும் மற்ற மன்னர்களும் இந்த சூரியகுலத்திலே வந்தவர்கள். இந்தச் சூரிய குலத்திலே தோன்றியவன் தான் தயரதன். அயன் புதல்வன் தயரதனை அறியாதார் இல்லை. அவன் பயந்த குலக்குமாரர்களே இவர்கள்" என்று கௌசிகமா முனிவர் சூரிய வம்ச அரசர்களுடைய பெருமைகளை சனகனிடம் கூறினார்.

"குமாரர்களைக் கொடுக்கமாட்டேன், கூட அனுப்ப இசையமாட்டேன்" என்று தசரதன் கூறியபோது பொங்கிய கோபத்தோடு எழுந்த முனிவர், தயரதனை அறியாதார் இல்லை என்கிறார். இறுதிக்காலம் வந்துவிட்டதோ என்று அஞ்சும்படி கோபத்துடன் எழுந்த அதே முனிவர்தான் தயரதனுடைய பெருமையை, இவ்வளவு சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். தயரதன் மகப்பேறு பெற்ற வரலாற்றையும் சனகனுக்கு விளக்கிக் கூறுகிறார். கலைக்கோட்டு முனிவர் வந்து யாகம் செய்து தயரதன் மனைவியர் மூவரும் அமுதுண்ட சின்னாட்களில் கருவுற்றனர். இராம, பரத இலக்குமண, சத்துருக்கனர்களைப் பெற்றனர் என்ற விவரத்தை முனிவர் விரிவாக சனகனிடம் கூறினார்.

குழந்தைகள் பிறந்த விபரத்தைக் கூறுவது கொஞ்சம் அதிகம் போல் தோன்றுகிறது. ஆனால் முன் கவிதைகளில் நடக்கும் நிகழ்ச்சிகளை நம் கண்கள் முன்பாகக்கொண்டுவந்து கம்பன் நிறுத்தினான். கதைப் போக்கிலே சில விவரங்களை இயற்கைக்கு ஒட்டித் திரும்பச் சொல்லித்தான் தீரவேண்டியுள்ளது. சனகன் ஒரு பிரம ஞானி. தன்னைச்சுற்றிலும் என்ன நடந்தது என்பதே அவனுக்குத் தெரியாது. தசரதனுக்குப் பிள்ளைகள் இல்லை என்பது வேண்டுமானால் சனகனுக்குத் தெரிந்திருக்கலாம். குழந்தைகள் பிறந்த விவரத்தை முனிவர் கூறவே சனகன் முதல் முறையாகக் கேட்கிறார் பெரியவர்கள் இருவர் சந்தித்துக்கொண்டு பேசினால், பேச்சு சற்று விரிவாகவும் விவரமாகவும் தானே இருக்கும். அந்த முறையிலே இந்த நிகழ்ச்சியும் அமைந்தது போலும்.

இராமன் பிறந்ததை முன்பு ஒரு பாடலில் கம்பன் கூறினான்,

ஒருபக லுலகெலா முதரத்துட் பொதிந்து
அருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ்
சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை.

இராமனைப்பெற்றெடுத்ததினால் கோசலைக்கு ஏற்றம் வந்தது. நற்குணங்களைக் கொண்ட கோசலையானவள் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். கோசலை, தசரதராஜனுடைய மூத்த மனைவி. மற்ற மனைவியர்கள் இருவரும் பிறகுதான்பிள்ளைகளைப் பெறுகிறார்கள். ஆகவே கோசலை பெற்றெடுத்த செல்வம் அரசுரிமைக்குரிய மூத்த பிள்ளை யாகும். இந்தப்பிள்ளை சாதாரணப் பிள்ளை இல்லை. பிறக்கும்பொழுதே தாய்க்குப் பெருமையைக் கொண்டு வருகிறது.

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்",

என்று வள்ளுவர் கூறுகிறார். இந்தப் பிள்ளையை ஈன்றபோதும் கோசலை பெருமையுற்றாள். பிறகு சான்றோன் எனப் பிறர்கூறவும் கேட்டுப் பெருமையுற்றாள். இதைத்தவிர ஈன்றபோதே தாய்க்குத் தனியான ஒரு பெருமையை இந்தப்பிள்ளை கொண்டுவந்தான். திறங்கொள் கோசலை என்று உலகத்தாரெல்லாம் போற்றப் பெருமையைப் பெறுகிறாள் கோசலை. நற்குணங்களைக் கொண்ட கௌசலையானவள் ஒரு குழந்தையைப் பெற்றாள் இந்தக் குழந்தை ஒரு தெய்வக் குழந்தையாகும். திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலைக் என்று கம்பன் கூறுகிறான்.

பிரளய காலத்திலே உலகங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கருதிய பகவான், எல்லா உலகங்களையும் தன்னுடைய வயிற்றிலே வைத்துக் கொண்டு காப்பாற்றினாராம். அத்தகைய அரியமூர்த்தி கோசலையின் வயிற்றில் பிறந்தார். வேதங்களை அனாதி என்று கூறுகிறோம் வேதங்களினால் இறைவனை இன்னபடி என்று எழுதிக் காட்ட முடியாமல், அரிய வஸ்துவாக இருக்கின்ற, இந்த ஆதிப் பரம் பொருள், கோசலை வயிற்றிலே பிறந்தார். இறைவனுடைய திருமேனி

கடைசிப் பக்கம் பார்க்க

எழுத்தாளன்

கனவு 10] பராபவ, மாசி 15-2-67 [கற்பனை 2

காங்கிரசுக்கு வாக்களியுங்கள்

சக்ரவர்த்திகளும், பேரரசர்களும், அவர்களுக்குத்துணையாக குருநில மன்னர்கள் பலரும் நாட்டின் கொடியை வானளாவ உயர்த்தி செங்கோல் ஆட்சி நடத்தினர் இந்த நாட்டில். அவர்களுக்கு வாசனை திரவியங்கள் கொண்டு வந்து கொடுத்து பொருளீட்டிய கும்பனியார் நாட்டின் ஆட்சியையே கைப்பற்றினார்கள். இதைக் கண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பாரத நாட்டில் அடி எடுத்துவைத்து கும்பனி ஆட்சக்கு ஓய்வு கொடுத்து தன்னாட்சி நிலைபெறச் செய்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சி நீண்ட நாட்கள் இங்கு நிலைத்து நின்றது. மக்களைப் பிரித்தாளும் தந்திரத்தைக் கைக்கொண்டு வெற்றிகண்ட வெள்ளையர்கள் பாரத மக்களை பலவகையிலும் பிரித்துவைத்து ஆட்சி நடத்தினார்கள். விவசாயத்திற்கும், நெய்தல் தொழிலுக்கும் சிறப்பு மிகுந்திருந்த இந்நாட்டின் நிலை தேய்ந்து விட்டது ஏகாதிபத்திய ஆட்சி காலத்தில். விவசாய அபிவிருத்திக்கு வழி வகுககாமலும் நெய்தஆடைகளை விற்பதற்கு சந்தைகள் ஏற்படுத்தாமலும் தொழிலை நசுக்கி யெறிந்தார்கள். வெள்ளையர்கள் தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்கள் பலவற்றை பாரத நாட்டில் விற்று, இந்நாட்டின் பொருளாதாரத்தை சுரண்டும் நோக்கத்தோடேதான் வெள்ளையர் ஆட்சி நடைபெற்றது. இந்தநிலையில் நாடு விடுதலைப் பெற்றது. அன்று மக்கள் எண்ணிக்கை முப்பத்தைந்து கோடிககுள். அவர்கள் தேவையை ஓரளவு நிறைவேற்றி நம்மை ஒன்றுக்கும் உதவாத சோம்பேறிகளாக்கி விட்டு, வெளியேறினார்கள் வெள்ளையர்கள் என்பதை அனைவரும் அறிவோம். பாரத நாட்டின் பொருளாதாரம் அடியோடு பாதிக்கப்பட்டு இருந்தது விடுதலையின்போது.

விடுதலைக்குப் பின் இருபது ஆண்டு காலத்தில் நாட்டின் நிலை பல வகையிலும் வியக்கததகக அளவில் முன்னேறி வந்திருப்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. விடுதலை கிடைத்தவுடன் மக்களுக்கு கல்வி அறிவை வளர்க்க வசதிகள் கிடைத்தன. தரிசாகக் கிடந்த நிலங்களில் பெரும் பகுதி சாகுபடிக்குக்கொண்டுவர திட்டங்கள் தீட்டப்பட்டன. நெய்தல் தொழிலையே மறந்துபோன சமூகத்தினருக்கு பல சலுகைகள் கொடுத்ததால், நெய்தல் தொழிலுக்கு புனர்வாழ்வு கிடைத்தது நம்மவர்கள் ஆட்சியில் அதன் பயனால் நெய்தல் தொழில்வளர்ந்து, அதை விற்பதற்கும் சந்தைகள் தேடும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. பிற நாடுகளைப்போல் விஞ்ஞானத்துறையிலும நமது நாடும் முன்னேற்றம் அடைய பல திட்டங்கள வகுதது செயல் படுத்தப் பட்டு வருகின்றது. இம்முறை ஆட்சியால் கூடிய விரைவில் பிற நாட்டின் உதவியின்றி நல்ல முறையில் நாடுநடைபெற பல திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். இவ்வளவு சாதனைகளும் எப்படி முடிந்தது என்பதைச் சற்று சிந்திக்கத்தான் வேண்டும். நாட்டின் விடுதலையில் ஓயாது உழைதத காங்கிரஸ் மகாசபை ஆட்சி பீடத்தில் அமர்ந்ததால்தான் என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வோம். காங்கிரஸ மகாசபையின் லட்சியத்தை உலக நாடுகள் அனைத்தும் வரவேற்று ஆதரவு காட்டியதின் பயனால் நாட்டை நல்வழி படுத்த அன்னியர்களின் உதவி நமக்கு எளிதில் கிடைத்தன.

ஜனநாயக முறையில் இன்று நாட்டை யார் ஆள்வது என்ற நிலையில் நாம் இருக்கின்றோம். இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? என்று திண்ணை வேதாந்தம் பேசுவதற்கு இது நேரமில்லை என்பதை அனைவரும் அறிவோம். நாட்டின் நிலை உலகம் மதிக்கத்தக்க அளவுக்கு உயர்த்தும் வரையில், இராமன்தான் நாட்டை ஆளவேண்டும் என்று அனைவரும் மனதிற்குள்ளே நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

நாடு என்பது ஒரு வண்டி, அதை இழுத்துச் செல்லும் மாடு அரசாட்சி. அதை ஓட்டிச்செல்பவன்தான் ஆட்சியை நடத்துபவன். மக்கள் கூட்டம் அதில் அமர்ந்து செல்பவர்கள். வண்டி ஓட்டி ஒருநாள் உடல் கோளாறினால் படுத்து விடுகிறான். அவசரமாகவும் மிகவும் வேகமாகவும வெளியூர் செல்லவேண்டி. ஒருவன் வண்டியை கட்ட ஒரு புதுஆளை நியமிக்கிறான். அவனும் வண்டியில் மாட்டை பூட்டி ஓட்டுகிறான். சற்று தூரம் சென்றவுடன் ஓட்டுபவன் புது ஆள் என்பதை மாடு உணர்ந்துவிட்டது. சண்டித்தனம் செய்கிறது. மாடு நகரவில்லை. படுத்து விடுகிறது, வண்டி ஓட்டியாக வந்திருக்கும் புதியவனுக்குக் கோபம் வருகிறது. அடித்து நொறுக்கி மாட்டை எழுந்திருக்க முடியாத நிலையில் வைத்து விடுகிறான். வண்டியினுள் அமர்ந்திருப்பவனுடைய கோபத்திற்கு ஆளாகி வண்டியையும், மாட்டையும் நடுபாதையில் கேட்பாரற்ற நிலையில் விட்டுச்சென்று விடுகிறான் வண்டியை ஓட்டி வந்த புதியவன். வண்டியின் சொந்தக்காரன் உடல நிலை சரிபெற்று பார்க்கும்போது, தன் வண்டி காணாததை உணர்ந்து வண்டியை தேடிப்பிடித்து விடுகிறான். மாட்டைத் தடவி தட்டிக்கொடுத்து வண்டியில் அமர்கிறான். வண்டியை இழுத்துக்கொண்டு மாடு ஒழுங்காக ஓடுகிறது. மாட்டின்மேல் விழுந்திருந்த அடிகளைப்பற்றி ஆராய முற்படுகிறான் சொந்தக்காரன். யார் உட்கார்ந்து ஓட்டினாலும் மாடு ஓடும்படி செய்யாத தன் தவற்றை உணர்ந்து விடுகிறான் அதற்கு ஏற்ற ஆட்களை தேடிப் பிடித்து மாட்டுடன் பழக்கிவிடுகிறான். அன்றிலிருந்து மாடும வண்டியும் ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கிறது. இந்நிலைதான் இன்றைய ஆட்சிககு ஏற்பட்டிருக்கிறது என்பதை சிந்தனையாளன் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை.

காங்கிரஸ் ஆட்சியினால் பல நன்மைகள் நாட்டில் விளைந்திருக்கின்றன என்பது எப்படி உண்மையோ அதுபோல் சில குறைகளும் முளைத்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இக்குறை எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றி சிந்தனையாளன் சிந்திக்க வேண்டியிருக்கிறது. நாட்டின்விடுதலைக்கு அயராது உழைத்த பல மேதைகளும், பதவிகள் கிடைக்காத காரணத்தினால் கட்சியிலிருந்தே வெளியேறி விட்டார்கள். ஒரு சிலர் மட்டும் விலகாமல் கட்சியைக் கட்டிக் காத்து நின்றனர். கட்சி வலுவடைய புதிதாக பலரை கட்சியில் சேர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது ஆளும் கட்சிக்கு. ஆட்சி வேறு கட்சி வேறு என்ற நிலையை ஏற்படுத்தாமல் கட்சியிலிருந்தே பிரிந்து சென்ற மேதைகளின் செயல்களைக் கண்டு சிந்தனையாளன் வருத்தப்பட வேண்டியவனாகின்றான். அம்மேதைகள் கட்சியிலிருந்து பிறிந்ததோடு நிற்காமல் பதவி கிடைக்காத காரணத்தால், கட்சியையே குறை கூறும் அளவுக்கு ஆளும் கட்சிக்கு எதிரிடையாக பிரசாரம் செய்து, பல புதிய எதிர் கட்சிகளையும் உருவாக்கி வளர்த்தும், தாங்களும வளர்ந்து விட்டார்கள்.

மக்கள் இனம் பெருகியும், ஏழைகள் அதிகமாக உள்ள இந்நாட்டில் ஜனநாயக சமதர்மம்தான் நிலைத்து நிற்க முடியும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வோம். ஜனநாயக சமதர்மத்தில் நம்பிக்கையற்ற சில சுயநலமிகள். பதவியின காரணமாக தாங்கள் விடுதலை வீரர்கள் என்பதையே

மறந்து, பிரசாரம் செய்து வருவதைக் கண்டு அவர்கள்மீது பரிதாபப்பட வேண்டியவஞக யிருக்கின்ருன் சிந்தனையாளன். இவர்கள் கட்சியிலிருந்து வெளியேறியதால் தான் சில சுய நலமிகள் காங்கிரஸ் கட்சியில் நுழைய வாய்ப்பு ஏற்பட்டது என்பதை எவரும் மறுகக முடியாது.

நாட்டின் நிலையையும் உணர்ந்து, கட்சியின் குறிக்கோளையும் கவனத்தில் கொண்டு பல எதிர்ப்புகளையும் சமாளித்துக் கொண்டு நிலைத்து நிற்க வேண்டிய நிலையில் காங்கிரஸ் ஸ்தாபனம் இன்று இருந்து வருகிறது. காமராசர் போன்ற ஒரு சிலர் மட்டும் நாட்டின் நலன் கருதி கட்சியைக் கலைக்காமல் மக்கள் நலனுக்காக அயராது உழைத்து வருகிருர்கள் என்பதை அனைவரும் அறிவார்கள்.

வண்டியின் சொந்தக்காரன் காங்கிரஸ் கட்சி. இன்று நடைபெறும் பொதுத் தேர்தலில் எப்படியும் காங்கிரஸ் வெற்றி வாகை சூடி ஆட்சி பீடத்தில் அமரப்போகிறது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை என்பது சிந்தனையாளனுக்குத் தெரியும். ஆயினும் காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் அமர்ந்த பிறகு நாட்டின் நிலையை உணர்ந்து, மககளின் நலன் கருதி கட்சியிலும், ஆட்சியின் நிர்வாகத்திலும் சற்று மாற்றங்கள் செய்தாக வேண்டியிருககிறது என்பதையும் மறந்து விடக் கூடாது என்பதை நினைவில் கொள்ளவேண்டும் என்பதை காங்கிரஸ் கட்சியினருக்கு நினைவுபடுத்த வேண்டியவஞகின்ருன் சிந்தனையாளன். நாட்டின் நிர்வாகத்தை திறம்பட நடத்தவும், மக்கள் நல்வாழ்வு வாழவும் வழி வகுக்க வேண்டும். நாட்டில் பலகட்சிகள் இன்று முளைத்து விட்டன. உருப்படியான திட்டங்கள் ஏதும் அக்கட்சிகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நாட்டின் மக்களின் பண்பாட்டிற்கும், பொருளாதார நிலைக்கும் ஏற்ப, ஜனநாயக சமதர்மம்தான் நிலைத்து நிற்கக் கூடியது. நாடு முழு வளர்ச்சி பெற்று பிற நாட்டின் உதவி சிறிதும் தேவையில்லை என்ற நிலைக்கு நாடு வளர்ந்தபின் நாட்டை யார் ஆளுவது என்று சண்டை செய்து கொள்வதில் ஓர் நியாயம் உண்டு. வெண்ணை உருண்டு வரும்போது தாளியை உடைத்து விடக்கூடாது என்பதை நினைவில் கொண்டு ஜனநாயக சமதர்மம் வளர நம் மக்கள் காங்கிரசுக்கே வாக்களிக்க வேண்டும் என்று எழுத்தாளன் வேண்டிக்கொள்ளுகிருன்.

— டி. எல். பஞ்சாபகேசன்

திரு. வாமதேவ சாஸ்திரி

தென்னுற்காடு மாவட்டம் விழுப்புரம் தாலூகா வெங்கந்தூர் எனும் தேசீய தெய்வீக புகழ்பெற்ற இடத்தில் தோன்றிய திரு. எஸ். வாமதேவ சாஸ்திரிகள் பல வடமொழி காவ்யங்களையும், நாடகங்களையும் தமிழ் தினசரி பத்திரிகைகள் சுதேசமித்திரன், தமிழ்நாடு, பாரததேவி ஆகியவைகளில் தொடர்ந்து எழுதி வந்த வடமொழி தென்மொழிப் புலவர் 11-1--1967 அன்று 75ம் வயதில் காலமானூர்.

சிறந்த சிவபக்தரும், பெருங் காங்கிரஸ் போதகருமாகிய இவர் பல பொது ஸ்தாபனங்களிலும் இருமொழிகளுக்கும் அருந்தொண்டாற்றியுள்ளார். மஹாமஹோான்யபானி என்று தமிழகம்போற்றி கௌரவித்த வெங்கந்தூர் கணபதி சாஸ்திரிகளின் இரண்டாவது புதல்வராகிய இப்பெரியார் ‘சுவாதி’ எனும் புனைப் பெயருடன் முப்பதாண்டுகளாக எழுதி வரும் தமிழ் எழுத்தாளர் அன்பர் வி. வி. திலக் சாஸ்திரியின் தந்தையாவார்.

நான்கு புதல்வர்களும் இருபுதல்விகளும் இருக்கின்றனர்.

அருமை தந்தையை இழந்த குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள். —ஆசிரியர்

முதல் பக்கத் தொடர்ச்சி

அருவுருவான அண்ணல் அடியவர் உள்ளம் போலே
திருவிளையாடல் செய்யும் சிந்தையும் தெளிந்து அறிந்து
கருத்தினில இருத்திவாழ்வீர் கவிதையில் விளக்கம்
காட்டித்
தருகிறேன் உள்ளம் போலத் தம்பிரான் உள்ளான்
உள்ளே.

உள்ளத்தில் விளக்கம் பெற்றே ஒவ்வொரு உயிரும்
மண்ணில்
உயரவே வேண்டுமென்றே உவந்திட்ட வாழ்வில்
மாந்தர்
உள்ளத்தை ஊமையாக்கி ஊனுடல் சுமந்து வாழ்ந்தே
உலவிடும் மிருகம்போல் உழல்பவர் பலபேர் உண்டு
உள்ளத்தின் உயர்வு தன்னை உணர்ந்திடா உயிர்
இனங்கள்
உள்ளத்தில் தெளிவு பெற்றே உயர்ந்திட்ட கதையும்
உண்டு
உள்ளத்தைப் பெற்றும் வீணே விலங்கெனும்
மாந்தருடே
உயர்வகை மனிதராக உயர்ந்திட்ட உணர்வும் உண்டே.

எவருக்கும் தீங்கெண்ணுத இதயமே தூய உள்ளம்
இனிமையாம் சொற்கள்கொண்ட இதயமே
வெள்ளை உள்ளம்
தவம் வேறு புவியில் இல்லை சாந்தமே உளத்தில்
கொண்டு
சார்ந்தவர் துயரம் போக்கித் தாமெனும் அகந்தை நீங்கி
சிவமயம் உலகம் என்று சிந்தையில் தெளிந்தறிந்து
சிறுமைகள் அனைத்தும் ஓடச் சிந்தையில் தீபம் ஏற்றிக்
குவலயம் இதனில் நின்று குலவுயிர் அனைத்தும் நாமே
கொண்டிடும் தூய உள்ளம் அங்கு குலவுவாள்
வெற்றிக்கன்னி

ஊரவர் துயரம் கண்டே உருகிடும் தூய உள்ளம்
உண்மையை உணர்ந்து கூறி உயர்த்திடும்தூய உள்ளம்
பாரினில் நல்லோர் தமமை படைப்பதே தூய உள்ளம்
பரமனை உளத்தே கொள்ளும் பாவமே தூய உள்ளம்
போருக்கு நின்ற போதும் பொங்குதலின்றி உள்ளச்
சாரமாச் சொற்கள் பேசும தவமதே தூய உள்ளம்
வீரமும் அறமாய்ப் பேணும் மெய்ஞ்ஞானமே
தூய உள்ளம்
யாவரும் பெறுக என்றே வாழ்த்துவம் வாரீர் இன்றே.

பொங்கற் புது நாளிதிலே சங்கத் தமிழ் கொண்டுப்
பூவுலகில் உள்ளவர்கள் யாவரையும் வாழ்த்திச்
சிங்கத் தமிழ்க் குலத்தின் சிந்தனைகள் எல்லாம்
சிறந்திங்கே பொலிந்திடுக செய்கைஅறம் ஓங்க
துங்கமிகு தூய உள்ளம் யாவருமே பெற்றுத்
துயர் தீர்ந்து மயல் தீர்ந்து சுடரெனவே வாழ்க
தங்கத் தமிழகத்தில் எங்கள் தமிழ்க் கேட்டோர்
தவருமல் வெற்றிபெற்று என்றென்றும் வாழ்க.

—நன்றி (வானொலி)

The Art of Government

—[By Kodumudi Rajagopalan]—

7. NATIONAL PLANNING

Modern life demands that all national activities should be planned if a people are to progress. Social and economic institutions must adjust themselves to changing times and environment and become broadbased by evolutionary processes. Today no country can escape the vigours of planning

For successful national planning, a central authority is a desideratum. Mere intentions are not enough to formulate a national plan. We need experts for the job. And their primary task is to find full employment for all the available labour force in the country.

Some may think that those who advocate planning are merly putting spokes in the wheels of production. But this is not so because modern industrial production is nothing if not planning. For this, mere paper plans or slogan-shouting will not help us. The state must see that planning is successful both in theory and practice

In the present day, to the extent permitted by modern scientific development, planning is necessary for both production and distribution whether it is a pin or a plate of food. We must eschew the kind of planning which means enriching the rich an exploiting the poor or which only throws the society into confusion.

To increase production, we need enthusiasm. Such enthusiasm can be got only from the dignity and joy of labour. The labourer is worthy of his hire. A just share ensures willing hands to increase production. Share does not mean value in rupees, and paise. The worker's satisfaction in sharing the benefits of production arises out of his willing efficient discharge of his duties in national wealth production.

"I am unconcerned about your starvation. Whether you perish or not, produce"—such an attitude will destroy production. That however, does not mean that the worker should be conferred rights even if he is idle.

Firm policies courageously executied should be the basis of national planning. Increased purchasing power is the real incentive to production we should never forget that this incentive alone constitutes economic strength. Such incentive should be so canalised to produce goods essential to the community and goods which will well fill the state treasuries. In this task, national planning should avoid dissatisfaction and exploitation. Social contract implies peaceful enjoyment of life by the citizen by vigilant and correct planning of national production and distribution. Only when this is respected as a human duty and obligation will socio-economic ills vanish from the face of earth.

Let those who scoff at planning do so. They say: "It is an illusion to think of planning in an ever-changing order of Nature. It is contrary to the laws of Nations" Such critics deny the very existence of culture and civilization. Material benefits are needed by men. But as man does not live by bread alone, they do not exhaust the potentialities of life. It is to satisfy the material needs of life that we resort to planning. We must concentrate more on the question of national needs than on their transrent nature. When new wants are created, new methods of satisfaction replace the old ones. Necessity knows no law and follows us for ever. Those who blame fate for leading an undisciplined or unplanned existence can never find joy in life.

Planning should eschew slogans and theories as these are drags on civilization; it must be based on the practical needs of changing environments. The success or failure of planning depends on the efficiency and steadfastness of those who execute it.

8. CONSTITUTION

The basis of a state is the constitution. The rights of the central authority of a state as distinguished from those of its constituent units and their interrelationship; the citizen's fundamental rights and how to safeguard them; how to meet national emergencies like war or internal revolts; the relationship between the executive and the judiciary; the allocation of national revenues between the central and constituent governments; the defence of the frontiers and internal order; foreign policy; internal and external trade and commerce; the rights of minorities-detailed rules regarding these and formlation of policies are the contents of a constitution.

Democracy must reflect the policies that ensure social welfare. The democratic outlook must so pervade the people that at all times they must respect the constitution. The state must never allow a political minority to change or over-ride

the constitution when such move is against the interest of the majority of the population. That does not mean that the constitution cannot be changed or amended or broadbased. But where a change is considered essential for the states progress, it must be effected with the willing consent of the majority just to avoid any opposition, at the change must not be irresponsibly executed.

Democracy means proper and strong rule by the people. It should not at any time be weak. But to say the state should obey the people, does mean that the state showed seek the people's views and consent on everything. It will be enough if the peoples representatives are vigilant about the welfare of the people. That will be the characteristic of a true democracy.

Parties based on different principles may rule. Neither the constitution nor the constitutional principles need necessarily change because of a change in the party which rules the state. Whichever party rules, must have the undivided loyalty of the organs of government; it must enhance the prestage of the state and must unify the people. It must end exploitation of man by man; spread the benefits of progress on all; and defend the realm. Neither the state nor the people should allow the capture of state power by forceful seizure. Such violent usurpation by militant minorities will destroy the stability of the state and present the evolution of true democracy.

Whatever its defects, parliamentary democracy by the system of ballot box is the best form of govern ment. None should tolerate the capture of such form of government by capitalistic cliques who mislead the people into stampeding them into dictatorship. Thus the peoples representatives cannot be exploiters hereafter. The rule must be that all men must work, in whatever from; and only the true representatives of such workers can run the government. Only such a workers' government can meet the challenge of the pseudo. democracy of capitalism on the one hand and the pseudo—equality of violently inclined commission

Caste, Religion and Money–the state must guard against these when they attempt to contro the state machinery. Even these mouth slogans of a "People's Republic". If these parties have a following, to that extent democracy is weakened, that is propaganda by true democrats is lacking.

The state must not oppose ventilation of just grievances. But it should not allow, in the name of civil liberties, those who ventilate grievances or spread disaffection.

Ministers in a democracy must treat all people alike. The state must not allow a particular linguistic group to dominate the central government. That results in narrow mindedness and the consequent dissatisfaction among the constituents units against the dominant linguistic group. The state should thus arm itself against linguism.

At the time of general elections, the government must be impartial to all parties. It must only see that the elections are held in a fair and peaceful way. The Ministers must not utilise their official influence in favour of parties to which they belong and vitiate the fairness of the elections. When such unfair influence vitiates an election only a harmful dictatorship will result from it, not a democracy. The rule of honest honest men, elected by fair democratic means; however hard and dictatorship is not harmfu dictatorship but is true democracy.

பொய் பேசும் உலகத்தில்....

[திருச்சி பாரதன்]

★

பொய்பேசும் உலகத்தில்
உழன்று உழன்று
புதிரான சிறுவாழ்வில்
விழுந்து விழுந்து
பைகாசின் விளையாட்டில்
வியந்து வியந்து
பைசாசு நடனத்தில்
மருண்டு மருண்டு
கைதேடுந் துணையழகில்
மகிழ்ந்து மகிழ்ந்து
கசப்பான பிறகதனில்
உமிழ்ந்து உமிழ்ந்து
மெய்தேடி அலைகின்றேன்
தளர்ந்து தளர்ந்து
மயல்போக்கும் வயலூரா
வருக விரைந்து.

நாடகமேதை சங்கரதாஸ் சுவாமிகளின் தபால் தலை

பம்மல் சம்பந்த முதலியார் நினைவு விழாவில் திருமதி சௌந்திரம் கைலாசம் வேண்டுகோள்

★

1—2—67 புதன்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை ராயப்பேட்டை லட்சுமிபுரம் யுவர் சங்கத்தில் நாடகப் பேராசிரியர் பத்மபூஷணம் பம்மல் சம்பந்தமுதலியார் அவர்களின் 95வது பிறந்தநாள் விழா சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

விழாவைத் தொடங்கி வைத்தத் தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தின் தலைவரும் உயர்நீதிமன்ற நீதிபதியுமான கனம் கே. எஸ், வெங்கடராமன் அவர்கள் பேசுகையில், பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் தமிழ் நாடகத்துறைக்குச் செய்த சேவைகளைப் பாராட்டினர். நாடகக்கலை சீர்கெட்டிருந்த காலத்தில் துணிவோடு முன்வந்து அக்கலைக்குத் தொண்டாற்றி வளர்த்த பெரியார்களை நாம் நன்றியோடு போற்றவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

விழாவுக்குத் திருமதி சௌந்தரம் கைலாசம் அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில்,

நாடகக் கலையின் பல்வேறு சிறப்புக்களை விரிவாகக் கூறியதோடு, இக்கலையின் மூலம் பக்தியையும், பண்பாட்டையும் வளர்த்த பெரியார்கள் பம்மல் சம்பந்த முதலியாரும், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளுமே என்பதை வற்புறுத்திக் கூறினர். அவர் மேலும் பேசுகையில்,

இவ்வாண்டு செப்டம்பர் 7-ஆம் தேதி தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றுண்டு விழா நடைபெற விருப்பதைக் குறிப்பிட்டு அந்த நாளில் தமிழ் நாடகக்கலைக்குச் சேவை செய்த இப்பெரியாரைப் பாராட்டும் முறையில் மத்திய அரசு சுவாமிகளின் திருவுருவம் பதித்த தபால்தலை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதற்குத் தமிழக அரசு உடனடியாக முயற்சி எடுக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

நாடகக் கலையைப்பற்றி விரிவுரையாற்றிய திரு. மீ. பா. சோமசுந்தரம் அவர்கள் நல்ல நாடகங்களை வளர்ப்பதோடு அவற்றை வரவேற்று ரசிக்கத்தக்க நல்ல ரசிகர்களையும் தயாரிக்க வேண்டியது கலைஞர்களுடைய கடமையென்றும், தாம் வெளிநாடு சென்றிருந்தபோது இத்தகைய அரியமுயற்சிகள் யூகோஸ்லேய நாட்டில் நடந்து வருவதை நேரில் பார்த்ததாகவும், அத்தகைய ஸ்தாபனங்கள் சர்க்கார் ஆதரவோடு தமிழ் நாட்டிலும் தோன்றவேண்டுமென்றும் கூறினர்.

சிறந்த அமைச்சூர் நடிகரான டாக்டர் திரு. வி ராமமூர்த்தி அவர்கள் பேசுகையில் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களி[illegible] நடத்தையையும் நாடக ஒத்திகைகள் நடைபெறும்போது அவர் அனுசரித்து வந்த கட்டுப்பாட்டையும் பற்றி விரிவாகக் குறிப்பிட்டார். மேலும், அவர் தொடர்ந்து பேசுகையில் சென்னை நகரில் தற்போது நடைபெற்றுவரும் அமெச்சூர் நாடகங்கள் சிலவற்றைக் கண்டித்ததோடு, இதுபோன்ற பயனற்றவெறும் நகைச்சுவை நாடகங்கள் மக்களின் பண்பாடுகளை நாசம் செய்துவிடுமென்றும், வருவாய் ஒன்றையே கருதி இந்நாடகங்களை நடத்தி வரும் சபைகள் நாட்டுக்குத் தீமை செய்கின்றனவென்றும் அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

கலைஞர் அவ்வை தி.க. ஷண்முகம் மறைந்த பழம் பெரும் நாடகாசிரியர் உடுமலைச் சரபம் முத்துச்சாமிக் கவிராயர் அவர்களின் திருவுருப்படத்தைத் திறந்து வைத்தார், அவர் பேசுகையில்,

சங்கரதாஸ் சுவாமிகளுக்கும் கவிராயருக்கும் இருந்த நட்புத்தொடர்பினையும், தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்ட கவிராயர், தமிழ் நாடகத்துறையில் பெரும் புலமைப் பெற்றிருந்ததையும் அவருடைய நாடகங்களின் சிறப்பியல்புகளையும் பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்.

கலைஞர் திரு, எஸ். வி, சகஸ்ரநாமம் அவர்கள் விழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை நிகழ்த்திய போது சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தின் நோக்கங்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டு, இந்நோக்கங்களை செயலாற்றுவதற்கு சர்க்காரும் ரசிகர்களும் பேராதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ருஷிய நாடு சென்றிருந்தபோது அங்கு தாம்கண்ட நாடக அரங்குகளின் சிறப்பினைப்பற்றி மேலும் அவர் பேசுகையில்,

தமிழகத்திலும் அதுபோன்ற நாடக அரங்குகளைஉருவாக்க சர்க்கார் முன்வரவேண்டுமென்று கூறினர்

இறுதியாக கலைஞர் டி. கே. பகவதி நன்றி கூறியபின் தேசிய வாழ்த்துடன் விழா இனிது முடிவு பெற்றது.

குமரன் உன் அழகாலே......

கவிஞர் : இளங்கம்பன்

அழகிற்கு அழகூட்டும் அருந்தெய்வம்நீ—மேவும்
ஆறுபடைவீடமர்ந்த பெருந்தெய்வம்நீ...அழகிற்கு

மேலெடுப்பு

பழனியிலே அமர்ந்த பைந்தமிழ்த் தெய்வம்நீ...அழகிற்கு
பாடுமனத்திற்குப் பாகாய் இனிப்போன் நீ......அழகிற்கு

முடிப்பு

ஓடும்வினைக ளெல்லாம் உன்னரு ளாலே
ஒழியும் பிறவியெல்லாம் உன்துணையாலே
கூடும்நலங்க ளெல்லாம் கூறும்உன் பெயராலே
குளிரும் மனங்களெல்லாம் குமரா உன்அழகாலே
......அழகிற்கு



உம்... ம்... ம்... கொஞ்சம் தள்ளினுல் போதும், கிளம்பி விடும். ஜோரான என்ஞ்சின்தான். ஆனுல் நாம் கை கொடுத்துத் தள்ள வேண்டியிருக்கிறது. கிளம்பிவிட்டால் பின் கவலையில்லை.

இந்தியப் பொருளாதாரம் என்ற வண்டி இப்போது கிளம்பிவிட்டது. உருக்கு ஆலைகளும், யந்திர சாதனங்களும், மின்சார திட்டங்களுமே நம் பொருளாதார உயர்வுக்கு ஆதாரம்.

வேலை ஆரம்பமாகிவிட்டது. முன்னேற்றம் திட்டமாக நடைபெறுகிறது. அதில் சந்தேகமில்லை.



தன்னம்பிக்கையூட்டும்

பொருளாதாரம் இதுவே!

DA-66/579

எழுத்தாளர்கள் பேரணி

—[பீட்டர் சீடனக்]—

★

இலக்கியம், வியாபாரப் பொருள் ஆகுமா? இலக்கியம், எப்படி வணிகப் பொருளாகும் என வாதாடுகிறவர்கள், சமீபத்தில் ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச இலக்கியக் கண்காட்சியை கண்டிருக்க வேண்டும்; தங்கள் கருத்தை நிச்சயம் மாற்றிக் கொண்டிருப்பார்கள். குட்டி எழுத்தாளர் முதல், பழம் பெரும் அறிஞர் வரை எழுதிய பல்லாயிரக் கணக்கான நூல்கள், இக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

பிராங்க்பர்ட் (டாட்)— ஒரு நாட்டில் பிரசுரிக்கப்படும் நூல்களின் அளவைக் கொண்டு, அந்த நாட்டில் எந்த அளவுக்கு கல்வி அறிவு பரவியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு நாடும், பழமையான தன் இலக்கியங்கள் குறித்து பெருமையும் பெருமிதமும் கொள்வது இயற்கையே. இலக்கியம், வணிகப் பொருளாகுமா? என்று குறைப்படுபவர்களும் உண்டு. ஆனால் சமீபத்தில் மேற்கு ஜெர்மனியில் பிராங்க்பர்ட் நகரில் நடைபெற்ற "சர்வதேச இலக்கியக் கண்காட்சி"யைப் பார்த்திருந்தால், தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டிருப்பார்கள். இலக்கியம் நூல் வடிவில் வியாபாரப் பொருளாக விற்பனையானால் தான் பல்வேறு இடங்களுக்கும் பரவ வாய்ப்பு ஏற்படும்.

ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச இலக்கியக் கண்காட்சியில், பல்வேறு நாடுகளில் வெளியான பல்லாயிரக் கணக்கான நூல்கள்—குறிப்பாகச் சொன்னால் 1,88,888 தலைப்புகளில் வெளியான நூல்கள் இடம் பெற்றிருந்தன. குட்டி எழுத்தாளர் முதல், புகழ் பெற்ற இலக்கிய அறிஞர்கள் வரை ஒன்று கூடி அளவளாவும் இடமாக அமைந்தது. நூல்களைப் பிரசுரிக்கும் சிறிய நூல் வெளியீட்டாளரிலிருந்து பெரிய வெளியீட்டாளர் வரை பங்கெடுத்துக் கொண்டனர். நூல் வெளியிடும் முறை; உரிமை; தரம் ஆகிய அம்சங்கள் குறித்து இவர்கள் கலந்துரையாடி, தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

மயிர் கூச்செறியச் செய்யும் 'மாயா ஜால' கதைகள் எழுதிய 'ஜூலிஸ் வெர்னி'யைப் போன்ற சிலை ஒன்று, ஜெர்மன் அரங்கு முன்பு அமர்த்தப் பட்டிருந்தது. காகிதக் கூழினால் தயாரிக்கப்பட்ட இச்சிலையுடன் பிரபல எழுத்தாளர்கள் கைகுலுக்கினார்கள்! இது டெலிவிஷன் திரையில் ஒலிபரப்பப்பட்டது, உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் 'ஹெமிங்வே'யின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஹாட்சனம், உள்பட பலர் நேரில் வந்திருந்தார். போலந்து எழுத்தாளர் நோவாகோல்ஸ்கி, "வார்சாவுக்கு வாருங்கள்; குளியல் தொட்டி நிறைய 'வோட்கா' (மது) தருகிறேன்" என எழுத்தாளர் நண்பர்களுக்கு அழைப்பு விடுத்தார். 'விவா மரியா' திரைப்படத் தயாரிப்பாளர் ரிசோரியும் வந்திருந்தார்.

இவரிடம் 'திரைப்பட காதல் தேவதை'யென வர்ணிக்கப்படும் 'பிரிகிட் பர்டோட்'டுக்கு ஒரே கோபம். மார்டின் வால்சர் என்ற ஜெர்மன் எழுத்தாளருக்கு, ஒவ்வொரு அரங்கிலும் மது உபசாரம் ஏகமாக நடந்தது.

கொரியாவிலிருந்து குழந்தைகளுக்கான நூல்கள், போலந்து நாட்டிலிருந்து புகைப்பட தொகுப்புகள், செக்கோஸ் — லொவிகியாவிலிருந்து சுவரொட்டிகள், சோவியத் ருசியாவிலிருந்து பழைய இலக்கியங்கள் என்று பல்வேறு நூல்கள், இக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

சிறிய வெளியீட்டாளர்களை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். மர்மக் கதைகள்; நகைச் சுவைக் கதைகள்; புதினங்கள் என்று பலவிதமாக புதிது புதிதாக நூல்களை வெளியிட்டுக் குவிக்கிறார்கள் இவர்கள். சதா ஐஸ்கிரீம் சுவைத்துக் கொண்டிருக்கும் ஸ்டாம்பர்ஸ், ஜெர்மன் 'கையடக்க நூல்' வெளியீட்டுத் தொழிலின் தந்தை எனப்படும் ரோவால்ட் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். ரோவால்ட், மதுப்பிரியர். இவருக்குப் பின்னால், ஒருபட்லர் எப்போதும் மதுப்புட்டியுடன் தயாராக காத்துக் கொண்டிருப்பார். பிராங்பர்ட் இலக்கியக் கண்காட்சியைக் சுற்றிப் பார்த்தவர்கள், அத்தனை இலக்கியங்களையும் சுவைத்துப் பார்த்தது போன்ற மனநிறைவுடன் திரும்பினார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ராமநாதபுரம்

தாயுமானவர் குருபூஜை

மகரிஷி தாயுமானார் குருபூஜை 2—2—67ல் சிறப்பாக நடைபெற்றது. கண்டிராக்டர் சிவத்திரு கே. ஏ. ஜெகந்நாத பிள்ளை உபயமாக அபிஷேக ஆராதனைகள் நடந்தன. சென்னை யோக, ஆசன, ஆலயத்தினர் கோ. மு. சுவாமி அவர்கள் தலைமையில் வந்து பாராயண வழிபாட்டில் கலந்துகொண்டனர். ராஜ்குமார் காசிநாத துரை, இசைமணி முத்தப்பா முதலான பலர் கீர்த்தனங்கள் பாடினர். கோவிலூர் வேதாந்த சபை தவத்திரு. காசிவாசி நடேசானந்த சரஸ்வதி சுவாமிகளும் தாயுமானவர் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்களும் பேசினர்.

தாயுமானவர் கவியரங்கம்

5—2—67 மாலை 6-15 அளவில் கோவிலூர் வேதாந்த சபையினரும் தாயுமானவர் வழிபாட்டுக் கழகத்தினரும் ஸ்ரீ தாயுமானவர் சன்னிதியில் அன்னாரது ஞானப்பாசுரங்களைப் பாராயணம் செய்தனர். பின்னர் செந்தமிழ்க் கனி வித்துவான் மா. குருசாமி அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. "தாயுமானவர்-என் தாய்" என்ற தலைப்பில் காசிவாசி நடேசானந்தரும் "தந்தை" "நண்பன்" "சீர்திருத்தவாதி" "குலதெய்வம்" "கலங்கரை விளக்கம்" "நினைவூட்டுபவர்" "சற்குரு" "தலைவன்" "ஞானவிளக்கு" தலைப்புகளில் கவிஞர்கள் தெய்வக்கவிமணி சேதுராமலிங்கம், சுடர்மதி, அபிராமம் முத்துராமலிங்கம், சிவசாமி, பூங்குன்றனர், இளவேள், தெய்வநெறித் தொண்டர் சேதுராமன், செந்திருமணாளன் ஆகியோர் கவிமாலை சூட்டினர். சிவத்திரு கே. ஏ. ஜெகந்நாதபிள்ளை, ராஜகுமார் சிதம்பரநாததுரை, த. குழந்தை, சா. ரா. பிச்சை முதலானோர் பிரார்த்தனை நிகழ்த்தினர். தவத்திரு காசிவாசி நடேசானந்த சரஸ்வதி சுவாமி வரவேற்புரையும் நன்றியுரையும் நிகழ்த்தினர்.

"எழுத்தாளன்"

(மாத இதழ்)

வருட சந்தா ரூ. 3—00
தனிப்பிரதி 25 பைசா

விபரங்களுக்கு:—

ஆசிரியர்,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடைத் தெரு, திருச்சி-2.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

யினுடைய நிறத்தையும், ஒளியையும் இன்னபடி என்று வரையறுத்துக் கூற முடியாமல் இருக்கிறது. மை என்று கூறினேன். மை என்றால் இருள் என்று பொருள். இறைவனுடைய திருமேனி இருளா? மையும், புதிய கரிய மேகமும் என்றும் பெற்றான். அழகைக் காட்டுகின்ற, ஒளிமயமான திருமாலை, லோகத்திலுள்ள எல்லோருக்கும் எல்லா செல்வங்களும் விடும்படி ஒரு குழந்தையாகக் கோசலை பெற்றெடுத்தாள்,

அக்குழந்தையினுடைய நிறம் என்ன? அஞ்சனம் என்றாலும் போதவில்லை. கருமுகிலும் நிறத்தைக் காட்டவில்லை. கொழுந்து இலையினுடைய தளிர் அதுவும் பொருந்தவில்லை. அஞ்சனம், கருமுகில், கொழுந்து ஆகிய மூன்று நிறங்களைச் சேர்த்தும் அந்தக் குழந்தையின் நிறத்தைக் கண்டு பிடித்துச் சொல்லமுடியவில்லை. இன்னும் பல இடங்களில் சொன்ன நிறங்கள் எப்படி என்று பார்ப்போம். கம்பன் காட்டுகின்ற நிறத்தைப் பார்த்துக் கொண்டு போனாலே இந்தக் கட்டுரை நிற அழகிலேயே முடிந்துவிடும். கம்பன் தன்னுடைய இராமாவதாரத்தை ஒரு பெருஞ் சித்திரமாக வரைந்தான். அந்தப் பெருஞ் சித்திரத்திற்குள்ளே பல சிறிய சித்திரங்களை வரைந்து சென்று விட்டான். பெரிய சித்திரம் தான் கம்ப இராமாயணம். உள்ளே உள்ள சிறிய சித்திரங்களைக் கொஞ்சம் கூர்ந்து நோக்கினால் ஒவ்வொரு சிறிய சித்திரமும் விசுவரூபமாகக் காட்சி அளிக்கின்றது. அவைகளை விளக்க பெரிய சித்திரமான இராமாயணம், அளவுக்குப் படம் போட்டுக் காட்ட வேண்டியுள்ளது. அப்படியும் அந்தச் சிறிய சித்திரத்தைப் பற்றிப் பூரணமாக உணர்ந்து கொண்டு விட்டோமா என்றால் அது தான் இல்லை. இராமன் பிறந்த பாட்டை எதற்கு நாம் விரிவாகப் பார்க்க வேண்டும். அதால் என்ன புதுமை இருந்துவிடப் போகிறது என்று முன்பு விட்டுச் சென்றோம். இராமன் பிறந்த வரலாற்றை விசுவாமித்திரர் சனகனிடம் கூறுவதைக் கேட்டு நாமும் இராமன் பிறப்பைப் பார்த்தோம். இப்போது ராமனுக்கு வயது பதினாறு. அந்தக் குழந்தை பிறந்த அழகை, கம்பன் கூறுகின்ற அழகிய பாட்டின் மூலம் இன்றெல்லாம் நின்று பார்த்துக்கொண்டு இருக்கலாம் போல் தோன்றுகிறது.

அஞ்சனக் கருமுகிற் கொழுந்து, எனச்சொல்லியும் அக்குழந்தையின் நிறத்தைக் கூற முடியவில்லை. திருமால் கருடன் மீது வந்து தோன்றிய அழகை ஒரு கவிதையில் கம்பன் கூறுகிறான்.

கருமுகிரு மரைக்காடு பூத்து நீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேந்தலர்த்
திருவொடும் பொலியவோர் செம்பொற்
குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினன்.

கரியமேக உடல் நிறையத் தாமரை பூத்துச் சந்தர, சூரியர் தரித்து, இலக்குமி நடுவில் விளங்கச் செம்பொன் மலை மேல் வருவது போல், மேகம் போன்ற கரிய திருமேனியுடைய திருமால் செந்தாமரை மலர்கள் போல் கண்கள் வாய் உந்தி, கைகள், பாதங்கள் பொலிய கருடன் மேல் வந்தார். இங்கும் என்ன நிறம் என்று சொல்ல முடியவில்லை. கருமுகில், தாமரைக் காடு, சந்திர சூரியர், செம்பொன் குன்று இத்தனையும் சேர்ந்து நிறம் என்ன என்று கூற முடியவில்லை.

வெய்யோன் ஒளிதன் மேனியின் விரிசோதி
யின் மறைய
பொய்யோ என்னும் இடையாளொடும்
இளையானொடும் போனான்
மையோ, மரகதமோ மறிகடலோ மழை
முகிலோ
ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா
அழகு உடையான்

இராமனும், சீதையும் இலக்குவனோடும் அயோத்தி நகரை விட்டு ஆரண்யம் செல்லுகிறார்கள். அந்த அழகைக்கண்டு கம்பனும் நின்றான். இங்கும் நிறத்தைக் கூற முயல்கிறான் மையோ (கருமையோ) மரகதமோ (பச்சையோ) மறிகடலோ (நீலமோ) மழை முகிலோ (மழை பெய்யும் நேரத்தால் உள்ள மேகத்தைப்போல) என்று ராமனுடைய அழியாத அழகுடைய திருமேனியின் நிறத்தைக் கூறப்பார்க்கிறான். முழுக்க நிறத்தின் வண்ணத்தைக் கூற முடியவில்லை.

மரகதச் சயிலர் செந்தா மரைமலர்க் காடு
பூத்துத்
திரை யெறி கங்கை வீசுந் திவலையா
னனைந்து செய்ய

மரகதமலை செந்தாமரை மலர்த்தொடுதி பூத்து, அலையெறிகின்ற கங்கை வீசும் நீர்த்துளியினால் நனைந்து செவ்விய இரண்டு குழைகளில் தொடர்ந்து செல்கின்ற வேற்கண்களைக் கொண்ட மயிலோடும் இருந்ததை ஒப்பமிகுந்த செவ்விகண்டவர்கள் பிறப்பெறும் பிள்ளைகளைத் தீரப்பெற்றவர்களாவார். மரகதமலை, பூத்த செந்தாமரை மலர் காடு, கங்கை நீர்த்துளி, மயில் இவைகளும் இராமனுடைய நிறத்தை இங்கும் கொண்டு வரமுடியவில்லை. இராமனுடைய அழகையும், நிறத்தையும் கவிதைகளில் அடக்க முடியாது. அன்றுகண்ட கம்பன் முன் எச்சரிக்கையுடன் "அழியாத அழகு" என்று அழகுடன் கூறுகிறான்.

இந்த அழியாத அழகுடைய பிள்ளையைத்தான் திறங்கொள் கோசலை பெற்றெடுத்தாள். இந்த அரிய தெய்வக் குழந்தைக்கு வசிட்டன் பெயர் சூட்டிய அழகையும் கம்பன் கூறுகிறான்.

கராமலைய தளர் கைக்கரி எய்த்தே
அராஅணையில் துயில்வோய் என அந்நாள்
விராவி அளித்தருள் மெய்ப் பொருளுக்கே
இராமன் எனப் பெயர் ஈந்தனன் அன்றே!

இராமன் என்ற குழந்தையை மூத்த புதல்வனாக தயரதன் பெற்றெடுத்த விவரத்தை விசுவாமித்திர முனிவர் சனகனிடம் கூறினார். அக்கூற்றை கம்பன் ஒரு கவியிலே கூறுகிறான். முன்பு நாம் கண்ட கவிதை இராமன் பிறந்த நிகழ்ச்சியைக் கூறிய ஒன்றாகும். இப்போது இராமனுக்கு வயது பதினாறு மணப்பருவத்தாலே உள்ள ஒரு வாலிபன் கண் எதிரிலும் வீற்றிருக்கிறான். அவனைப் பார்த்துக்கொண்டே, அவன் வடிவழகிலே மூழ்கிக்கொண்டே விசுவாமித்திர முனிவர் சனகனிடம் இராமன் பிறந்தான் என்று அழகுறக் கூறுகிறார்.

பரவியுள்ள தீவினைகள் பண்ணிய பாவத்தாலும் அறிவதற்கு அருமையான எல்லை இல்லாத வேதங்களினால் கூறப்பட்டுள்ள தருமங்கள் செய்த புண்ணியத்தினாலும் சிவந்த வாயையுடைய கௌசல்யா தேவியானவள், கடகம் என்றும் அணி அணிந்த, வித்தாரத்தால் எழுதமுடியாத பேரழகும் கடல் போன்ற நிறமும் உடைய இராமனைப் பெற்றெடுத்தாள். பாவம் அழிய புண்ணியம் வளர இராமன் பிறந்தான். அறம் செய்த அறத்தாலும் இராமன் பிறந்தான் என்ற முனிவர் வாக்கு மிகவும் அழகுடன் பொருத்தமான இடத்தால் பொருத்தமாகக் கூற அமைந்துள்ளது. பெண்ணைப் பெற்றவனுக்கு பிள்ளையின் பெருமையைத் தெரிந்து கொள்ள இதைக்காட்டிலும் சிறப்பு வேறு என்ன வேண்டும். எழுதரிய திருமேனி, கடல் போன்ற திருமேனி என்று இங்கும் திருமேனியின் நிறத்தைக் குறிக்கின்றான் கம்பன்.

விரிந்திடுதீ வினை செய்த வெவ்விய தீ
வினையாலும்
அருங்கடையின் மறையறைந்த வறஞ்செய்த
வரத்தாலும்
இருங்கடக்க கரதலத்தில் வெழுதரிய
திருமேனிக்
கருங்கடலைச் செங்கணிவாய்க் கவுசலை
யென்பாள் பயந்தாள்-

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press
24, Theradi Bazaar, Tiruchirappalli-2. Asst. Editor: T. L. Panchapakesan.